எம்.சி.ஓபி.எண் : 1505, 1504/2013 தேதி: 16.10.2025

மசா : 2

பெயர் : முரளி

த/பெயர் : முனி ரத்தினம்

வயது : 65

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த சமயத்தில் நான் பயணம் செய்த காரில் 4 நபர்கள் பயணம் செய்தோம். நான் அரக்கோணம் சார்ந்தவர் என்றால் சரிதான். காரில் பயணம் செய்த 3 நபர்களும் எனக்கு தெரிந்த நபர்கள் என்றால் சரிதான். மேற்படி காரின் சொந்தகாரர் வெங்கட்ராமன் அரக்கோணம் சார்ந்தவர் தான். நாங்கள் 4 பேரும் பெங்களூருக்கு வழக்கு சமந்தமாகவும் என்னுடன் பயணம் செய்த நபரின் உறவினறை பார்க்கவும் சென்றிருந்தோம். வெங்கட்ராமன் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவரது காரில் பெங்களூர் சென்று அங்கிருந்த சென்னைக்கு வரும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஜெர்மயா தான் காரை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு அவரை 30 வருடமாக தெரியும் அவருக்கு கார் ஓட்ட தெரியாது. மேற்படி விபத்தானது 6.12..2011 விடியற்காலை 1.10 மணியளவில் இந்த விபத்து நடந்தது. விபத்தின் போது AP 04 V 5025 சாலையின் நடுவில் நிறுத்தி வைக்கபட்டிருந்தது என்றால் சரியல்ல. மேற்படி லாரியானது பிரேக்டவுன் ஆன காரணதினால் சாலையின் ஒரமாக நிறுத்தி வைக்கபட்டது. மேற்படி சாலையானது அவ்விடத்தில் வலைவாக இருந்தது. காரின் முன் பகுதியில் இிடித்துள்ளது என்றால் சரிதான். காரின் முன் பகுதியானது மிகவும் மோசமாக சேதம் அடைந்தது என்றால் சரியல்ல, சேதம் அடைந்தது. கார் ஓட்டி வந்த நபர் வெங்கட்ராமன் என்பவருக்கு காயம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. சின்ன சின்ன காயங்கள் ஏற்பட்டிருந்தது. வெங்கட்ராமன் உண்மையில் காரை ஓட்டிருந்தால் காரின் சேதாரம் அதிகமாக இருப்பதால் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றாலும் அவர் காரை ஓட்டததால் காரணத்தினால் தான் அவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. காரை ஓட்டியதாக கூறப்படும் வெங்கட்ரமானோ என்னுடன் பயணம் செய்த நபரோ என்னை மருத்துவமனையில் சேர்கவில்லை என்றால் சரிதான். அவருடைய கார் பழுது ஆகிவிட்டதால் எங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்தார். ஜெர்மயா காரை ஒட்டியதால் நாங்களோ ஜெர்மாயாவோ நாங்களோ என்னுடன் பயணம் செய்த நபர் புகார் அளிக்கவில்லை என்றால் எங்களுக்கு மேற்படி விபத்தினால் பலத்த காயம் ஏற்பட்டதால் போலீஸ்சார் ஏ்ங்களை மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். அதனால் நாங்கள் 13.12.2011 ல் எங்களுக்கு தெரிந்த வழக்கறிஞர் மூலம் பொய்யான

வழக்கு தாக்கல் செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சி.எம்.சி மருத்துவமனையில் எங்களுக்கு விபத்து பதிவேடு கொடுத்தார்களா என்றால் தெரியாது. விடுவி சான்று கொடுத்துள்ளார்கள். மசா ஆ19 ல் கண்டுள்ள 7.12.2011 முதல் 17.12.2011 வரை தான் சிகிச்சை எடுத்தாக காணப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு தொடர் சிகிச்சை ஆவணம் தாக்கல் செய்துள்ளனோ என்றால் செய்துள்ளேன். மசா ஆ20 மருத்துவ பில்களுகாகன பரிந்துரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மருத்துவ பில்களுக்கு மெடிகிளைம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அது நான் செலுத்திய பிரிமியத்திற்கான காப்பீடு தொகை தான் பெற்றுள்ளேன். எனக்கு மேற்படி மெடிகிளைம் ரூ. 45,000 தான் பெற்றுள்ளேன். மீதி தொகையை நான் எனது கையிலிருந்து தான் செலவிட்டுள்ளேன். நான் அரக்கோணம் மற்றும் இராணிபேட்டையில் வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன் என்றால் சரிதான். 6.12.2011 பிறகுண்டான வருமான வரி சான்றையோ ஸ்டேமெனட் விபத்து பின் என்னால் வரி செலுத்த இயலவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்தினால ஏற்பட்ட காயத்தினால் எனக்கு எந்த காயமும் இயலமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு படிபட்டு ஏற தற்பொழுதும் இயல்வது இல்லை. எனது வருமான இழப்பு காட்டக்கூடிய ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தானது AP 04 V 5025 மேற்படி லாரியின் ஒட்டுநரால் தான ஏற்பட்டது என்றாலும அதனால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்ட ஈடானது அதிகபடியானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.